செய்தி வெளியீடு எண் :1557 நாள் : 03.08.2023

**பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு**

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, நம் மாநிலம் அமைதிப்பூங்காவாகத் திகழ இரவுபகல் பாராமல் உழைக்கும் காவல்துறை நண்பர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இன்று பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, அங்கிருந்த காவலர்களுடன் உரையாடினேன். பெண் காவலர்கள் பலரும் பொறுப்புணர்வோடும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்றுவதைக் கண்டு கூடுதல் மகிழ்ச்சியடைந்தேன்.

காவல்நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்துடன் வரவேற்று, அவர்களைக் கனிவுடன் நடத்தி உதவிட 912 காவல் நிலைய வரவேற்பாளர்கள் / தகவல் பதிவு உதவியாளர்களுக்குக் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பணி நியமன ஆணைகளை வழங்கியிருந்தேன். அந்த வகையில், வரவேற்பாளர் பகுதிக்குச் சென்று அதன் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தேன்.

தமிழ்நாடு காவல்துறை எந்நாளும் பொதுமக்களின் நண்பன் எனச் சொல்லும் வகையில் பணியாற்றி அரசுக்கு நற்பெயர் பெற்றுத்தர வேண்டும்.

.......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in